1984 மார்ச் 26]

திரு. இரா. கருப்பையா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டாண்டுகள் அல்லது ஐம்பது புள்ளிகள் உயர்ந்தால் குறைந்த பட்சக் கூலியைத் திருத்தியமைக்க ஏற்பாடுகள் செய்யப்படும் என்று அமைச்சரவர்கள் அறிவித்தார்கள். 1982 நவம்பரில் விலைவாசி 496 ஆகவும், 1983 டிசம்பரில் 559 ஆகவும் இருக்கிறது. எனவே, இப்படி ஐம்பது புள்ளிகளுக்கு மேலே உயர்ந்திருப்பதால் இதை மாற்றியமைப்பதற்கான நடவடிக்கைகளை அமைச்சரவர்கள் எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அதுதான் சொன்னேன், கூடுமானவரையில் இதையும் பின் பற்றிச் செயல்பட்டுக் கொண்டு வருகிறோம் என்று.

குடவாசல் ஒன்றியப் பகுதியிலுள்ள ஊர்களுக்குக் குடிநீர் வழங்கும் திட்டம்.

454 —*(வினா எண். 18087) **திரு. இரெ. இராசமாணிக்கம் :** மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) தஞ்சை மாவட்டம், குடவாசல் ஒன்றியம் விளாகம், நல்லிச்சேரி, செகந்நாதபுரம், பல்லவநத்தம், அபிசேகமங்கலம், கடகம்பாடி, நெம்மேலி, அதம்பாவூர், அதம்பாவூர்ப்படுகை, தேதியூர், வில்லியநல்லூர் ஆகிய பகுதிகளில் குடிதண்ணீர் உப்பு நீராக உள்ளதால் நல்ல குடிதண்ணீர் வழங்கவேண்டி அரசுக்கு முறையீடு வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அது குறித்து அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) ஆம்.

(ஆ) மேற்கண்ட அனைத்துச் சிற்றூர்களுக்கும் தற்போது குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. கடகம்பாடி நீங்கலாக மற்ற அனைத்துச் சிற்றூர்களிலும் ஆழ்துளைக் கிணறுகள் அமைக்கப் பட்டுள்ளன. கடகம்பாடியில் குடிக்கத் தகுதியான நீர் ஏற்கெனவே உள்ளது.

தாரமங்கலம் பேரூராட்சியில் குடிநீரை விநியோகம் செய்ய மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி கட்டும் திட்டம்.

455 —*(வினா எண். 18208) **திரு. செ. செம்மலை :** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) சேலம் மாவட்டம் தாரமங்கலம் பேரூராட்சியில் குடிநீரைச் சேமித்து விநியோகம் செய்ய ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டிக்கொடுக்கும் செயற்குறிப்பு அரசிடம் உண்டா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?